V.—POINT OF ORDER.

NOTICE FOR STATEMENT UNDER RULE 82 BY CHIEF MINISTER.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சபாநாயகர் அவர்களே, ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் நில வரியைக் குறித்து தன்னுடைய விவரமான அறிக்கையை இந்த மன்றத்தின் முன்னாலே சமர்ப்பித்திருக்கிறார்கள். 82-வது விதியின் படி எந்த சந்தர்ப்பத்திலும்

'A statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker but no question shall be asked at the time the statement is made.'

என்ற விதி முறை இருக்கிறது. அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிற அறிக்கையைப்பற்றி அல்ல என்னுடைய ஆட்சேபணை. என்னுடைய ஆட்சேபணை எல்லாம், இந்த மன்றத்தினுடைய இன்றைய நிகழ்ச்சி நிரல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சி நிரலில் இன்றைக்கு முதல் அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையை இந்த சபையில் சமர்ப்பிக்கப் போகிறார்கள் என்று முன்னறிவிப்பு கொடுத்திருக்கலாம். கனம் சபாநாயகர் அவர்களுக்கும் அதைப்பற்றி முன்னால் தெரிவித்திருக்கலாம். அதற்கு ஒரு வாய்ப்பு இருந்திருக்கிறது. நவம்பர் இரண்டாம் தேதி என்று ஏற்கனவே தன்னுடைய காரியாலயத்தில் அச்சடித்து வைத்துக்கொண்டு, இப்பொழுது இந்த அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். நிகழ்ச்சி நிரலில் இந்தத் தகவல் தெரிவிக்கப்படவில்லை. தங்கள் அனுமதி கோரி தங்களுக்கும் இந்தத் தகவல் தெரிவிக்கப்படவில்லை. அது மட்டுமல்ல. நாளைய தினம் தனி நபர் தீர்மானம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வர இருக்கிறது. நிலவரி சம்பந்தமான ஒரு தீர்மானம் வர இருக்கிறது. அக்டோபர் மாதம் 28-ம் தேதி 'பாலட்' எடுக்கப்பட்டு அந்தத் தீர்மானம் வர இருக்கிறது. இம்மாதிரி ஒரு விவர அறிக்கை கொடுத்தார்களே என்பது பற்றி என்னுடைய ஆட்சேபணை இல்லை. அந்தப் பெருமையை அவர்கள் தேடிக்கொண்டு விட்டார்களே என்று ஆட்சேபணை இல்லை. சட்டமன்றம் கூட இருக்கிறது. ஏற்கனவே 20 நாட்களுக்கு முன்பாகவே ஒரு அறிக்கையை அச்சடித்து வைத்துக்கொண்டு இப்பொழுது அதை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்களே? எங்கே எதிர்க்கட்சியினர் தீர்மானம் கொண்டுவந்தால், நிலவரியை ரத்து செய்வதற்கான நியாயமான பெருமை அவர்களுக்குப் போய்விடுமோ, எங்கே மக்கள் மனதைக் கவர்ந்து விடப் போகிறார்களோ என்ற காரணத்தினால் அரசாங்கம் அவசர அவசரமாக இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். நாளைய தினம் இதுபற்றி தனி நபர் தீர்மானம் வர இருக்கிறது. நாளைய தினம் இந்த விவர அறிக்கையை அளித்திருக்கலாம். அல்லது நிகழ்ச்சி நிரலில் சேர்த்திருக்கலாம். நாளைக்கு தங்கள் அனுமதி கோரி இந்த அறிக்கையை இங்கே சமர்ப்பிப்பதற்கு அவகாசம் இருக்கிறது. திடீரென்று எழுந்த பிரச்னை இல்லை இது. வெகு நாட்களாக மக்கள் இந்தக் கோரிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். நீண்ட நாட்களாக எதிர்க் கட்சிகள் வற்புறுத்தி வருகிற கொள்கை இது.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் நாளைக்கு இதைப்பற்றிப் பேசலாம். பாயிண்டு ஆப் ஆர்டர் என்ன என்பதை மட்டும் இப்போது தெரிவிக்க வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : இது 'கண்டெம்ப்ட் ஆப் தி ஹவுஸ்' . . . .

கனம் சபாநாயகர் : அதை மட்டும் பற்றி கனம் அங்கத்தினர் சொல்லவேண்டும். மற்றபடி அவர்கள் பேசவந்ததை நாளைக்குப் பேசிக்கொள்ளலாம். பாயிண்டு ஆப் ஆர்டர் என்ன, 'ப்ரீச் ஆப் ரூல்' என்ன என்பதை மட்டும் இப்பொழுது சொல்ல வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : தங்களுக்கு இதைப்பற்றி முன் அறிவிப்பு கொடுத்திருக்க வேண்டும். நிகழ்ச்சி நிரலில் இதைப் பற்றித் தெரிவித்திருக்கவேண்டும். அரசியல் கண்ணோட்டத் தோடு இம்மாதிரி செய்யப்பட்டிருக்கிறது. இன்னொரு வேண்டு கோளையும் நான் விடுத்துக்கொள்கிறேன். இது ஒரு முக்கியமான அறிக்கை. எல்லா உறுப்பினர்களும் இந்த அறிக்கையைப்பற்றிய விவாதத்தில் பங்குகொள்ள வேண்டும். நெடு நாட்களாகப் பலரும் பேசிக்கொண்டிருக்கிற ஒரு பிரச்னை. கனம் முதல் அமைச் சர் அவர்கள் சொல்லக்கூடும். தனி நபர் தீர்மானம் வருகிறது, அப்பொழுது ஒரு மணி நேரம் பேசிக்கொள்ளலாம் என்று சொல்லக் கூடும். இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதினால் ஒரு நாளைய விவாதம் இதற்காக ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்** : 82-வது விதியின் பிரகாரம் அரசாங்கம் ஸ்டேட்மெண்டு கொடுக்கலாம் என்று இருக்கிறது. எத்தனையோ முறை இந்த மன்றத்தில் இம்மாதிரி நடந்திருக்கிறது. அப்படி நடக்கிறபொழுதெல்லாம் அஜெண்டாவில் இதைப்பற்றித் தகவல் கொடுப்பதில்லை. எனக்கு நினைவு இருக்கிறது. தாங்களும் இதை உணர்வீர்கள். ரூல் 82-ன் கீழ் செய்யப்படும் ஸ்டேட் மெண்டு தங்களுடைய அனுமதியைக் கோரித்தான் செய்யப்படு கிறது. தங்களுடைய அனுமதி இல்லாமல் பண்ணுவதில்லை. அரசாங்கம் முன்னால் இதைப்பற்றித் தங்களுக்குத் தெரிவித்திருக் கிறது. நேற்றைய தேதியில், முதல் தேதியில், தங்களுடைய அனுமதி கோரிக் கடிதம் எழுதியிருக்கிறேன். தங்கள் அனுமதி யோடு அதைப் படிக்கிறேன்.

"Under Rule 82 of the Madras Legislative Assembly Rules, I wish to make a statement on a matter of public importance, for which I seek your consent."

ஆகவே, நேற்றுக்கூட எழுத்து மூலம் இதுபற்றித் தங்கள் அனுமதி கோரியிருக்கிறேன். எழுத்து மூலம் கொடுப்பதற்கு அவசிய மில்லை. இருந்தாலும், இருக்கட்டும் என்று எழுத்து மூலம் கொடுத்திருக்கிறேன். இன்றைக்கு 10-30 மணிக்குமேல் நடந்த பிசினஸ் அட்வைசரி கமிட்டி கூட்டத்தில்கூட இதைப்பற்றித் தெரிவித்தேன். 82-வது விதியின்படி கேள்வி நேரத்திற்குப் பிறகு ஒரு ஸ்டேட்மெண்டு கொடுக்கப்போகிறேன் என்று தங்களுடைய

2nd November 1966] *[திரு. எம். பக்தவத்சலம்]*

அனுமதியையும் பெற்றேன். கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஆத்திரம் வரலாம். கோபம் வரலாம். அதற்கு நான் பொறுப்பு இல்லே. இதில் பாயிண்டு ஆப் ஆர்டர் என்ன இருக்கிறது? ஒன்று மில்லே. என் பேரில் வருத்தப்படலாம். ஆத்திரப்படலாம். அதை நான் மறுக்க முடியாது. இதிலே விதிக்கு முரணுக ஒன்றுமில்லே.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்கள் ஸ்டேட்மெண்ட்கள் கொடுப்பதென்ருல், ஃபைல்களேப் பார்த்தால்கூடத் தெரியும், முன் கூட்டியே அறிவிப்பார்கள், நிகழ்ச்சி நிரலில் கூட வரும், 'கனம் Industries Minister will make a Statement' என்று ஆகவே, கனம் முதல் அமைச்சர் சொல்வது முற்றிலும், முழுமையான உண்மை யல்ல என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லே. மற்றபடி ஏதோ Political tactics என்ருல், I am not concerned with that. அதை அப்படியே விட்டுவிடலாம்.

VI.—GOVERNMENT BILL.

THE MADRAS PRIVATE EDUCATIONAL INSTITUTIONS (REGULATION) BILL, 1966 (L.A. BILL NO. 14 OF 1966).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker Sir, I beg to present the Report [a] of the Joint Select Committee on the Madras Private Educational Institutions (Regulation) Bill, 1966 (L.A. Bill No. 14 of 1966) and move—

"That the Bill, as amended by the Joint Select Committee, be taken into consideration."

As the hon. Members are aware, this Bill was introduced in the Assembly on the 5th August 1966. Subsequently with the concurrence of the Legislative Council, the Bill was referred to a Joint Select Committee. The Committee called for and received up to 3rd October 1966 written memoranda from interested individuals and institutions. It also recorded on 18th October 1966 evidence of the representatives of institutions and others who desired to tender oral evidence. In the light of the representations received, the Committee considered the Bill in detail and submitted its report together with a copy of the Bill as revised by it.

I shall briefly explain the important changes which the Joint Select Committee has made in the Bill.

The Bill as originally presented did not cover institutions which were awarding their own certificates, diplomas or degrees. The Joint Select Committee has decided that such institutions should be brought within the scope of the Bill and that specific provisions should be made regarding certificates, degrees or diplomas issued

---

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 26th October 1966.